# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 54 — 1973 අප්‍රේල් 06 වැනි සිකුරාදා — 1973.04.06

54 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 06 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. .. | 339 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 349 |


## பதவிகள்—வெற்றிடம்

*"ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"*

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிக்களுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுங்குவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

**முக்கிய அறிவித்தல்**

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் ஏதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிபபடுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிருபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும், தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நோத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்திரட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.*

---

*சிறுகைத்தொழிற்றிணைக்களம்*

*தற்காலிக ஆடைவகை வடிவ அமைப்பாளர் (நெசவு) பதவி*

*சிறுகைத்தொழிற்றிணைக்களத்திலுள்ள தற்காலிக ஆடைவகை வடிவ அமைப்பாளர் (நெசவு) பதவிக்கு ஸ்ரீலங்கா (இலங்கை) குடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணப்படும் மாதிரிப் படிவத்தைப் போன்ற படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973.04.30 ந் தேதியன்றோ அதன் முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.*

*2. சம்பள அளவுத்திட்டம் :*

*இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 6,024—144×4—180×8—8,040 ஆகும். (வினைத்திறமை காண் தடைகள் ரூபா 6,780 க்கும் ரூபா 7,500 க்கும் முன்பாக)*

*3. சேவை நிபந்தனைகள் :*

*(i) பதவி தற்காலிகமானது ;*

*(ii) அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும்.*

*4. ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—*

*(அ) (1) சிங்கள/தமிழ், எண்கணிதம்/கணிதம், வரைதல் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிக் கல்விப் பொதுத் தாாதர (சாதாரணம்)ப் பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளாரெனவும்.*

*அல்லது*

*(2) அதற்குச் சமானமான அல்லது உயர்ந்த பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளாரெனவும்,*

*(ஆ) (1) அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப நிறுவனமொன்றிலிருந்து ஆடைவகை நெசவு வடிவ அமைப்பிற் சான்றிதழ் அல்லது தகுதித் தேர்வுப்பத்திரம் பெற்றுள்ளாரெனவும்,*

*அல்லது*

*(2) வடிவ அமைப்புக்களுடனுய கைத்தறித் துணி நெசவிற் குறைந்தது பத்து வருட அனுபவம் பெற்றுள்ளாரெனவும்,*

*(இ) மிகச் சிறந்த குணப் பண்பும் உடனலமுமுள்ளவரெனவும்,*

*(ஈ) 1973.04.30 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும் 45 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இவ் வயதெல்லை ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.*

*குறிப்பு.—விண்ணப்பகாரர்களின் திறமைகளைக் கணிக்கவும் அவர்களாற் செய்யப்பட்ட வேலைகளின் மாதிரிகளைச் சமர்ப்பிக்கவும் பரீட்சையொன்றுநடாத்துவதென எதிர்பார்க்கப்படுகிறது.*

*5. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன்—*

*(அ) பிறப்புச் சான்றிதழினதும்*
*(கவனிக்கவும்.—ஞானதீட்சைச் சான்றிதழ்களோ அன்றி உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)*

*(ஆ) மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழினதும் ;*

*(இ) மிகஅண்மைக் காலத்துக் குணச் சான்றிழ்தகள் மூன்றினதும் .*
*(அவற்றின் படிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா)*

*(ஈ) தொழினுட்ப அல்லது தொழில் முறைத் தகைமைச் சான்றிதழினதும் அல்லது இவையிரண்டினதும் படிகளை இணைத்தல் வேண்டும்.*

*குறிப்பு.—வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும்வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப் படமாட்டா.*

*6. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களிற் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

*7. கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவிலேயே சமூகமளித்தல் வேண்டும்.*

*8. விண்ணப்பத்திற் கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியற்றவை எனத் தெரிவுக்கு முன் காணப்படின் விண்ணப்பகாரர் தகைமையற்றவராகக் கருதப்படுவதுடன் தெரிவுக்குப் பின்பாயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவார்.*

*9. வர்த்தமானியின் பகுதி I பிரிவு II ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள, அரசசேவைப் பதவிகட்காய நியமனங்கட்கு ஏற்புடைய பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.*

*ஜி. பி. ஹத்தொட்டுவ,*
*பிரதிப் பணிப்பாளர் (முகாமை),*
*சிறுகைத்தொழிற் பணிப்பாளருக்காக.*

*சிறுகைத்தொழிற்றிணைக்களம்,*
*ஹேமாஸ் கட்டிடம்,*
*கொழும்பு, 1973.03.22.*

**தற்காலிக ஆடைவகை வடிவ அமைப்பாளர் (நெசவு) பதவிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

(கவனிக்கவும்.—விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தற்காலிக ஆடைவகை வடிவ அமைப்பாளர் (நெசவு) பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட்டு அது சிறுகைத்தொழிற் பணிப்பாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்).

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் படி இணைக்கப்படல் வேண்டும்)

4. நாட்டினம் :————.

5. மணமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகள் அல்லது தொழின் முறைத் தகைமைகள் அல்லது இவ்விரண்டும் :————.

7. கல்விக் கூடத்தை விட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் அல்லது பெற்ற பயிற்சிகளின் விபரங்கள் அல்லது இவையிரண்டும் :————.

8. அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, கூட்டுத்தாபனமொன்றிலோ கடமையாற்றியிருப்பின் தொழிலை நிறுத்தியதற்கான காரணங்கள் கூறப்படல் வேண்டும் :————.

9. எப்பொழுதாவது குற்றமியற்றவரெதற்காவேனும் ஒரு நீதிமன்றத்திற் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக் குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைக் குறிப்பிடவும் :————.

10. குணச்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.
1.
2.
3.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

4-98—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

---

**ஆயுள்வேத இலாகா**

உடலியல் செய்முறை காண்பிப்போர் பதவி

ஆயுள்வேத இலாகாவில் உடலியல் செய்முறை காண்பிப்போர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ் காணும் மாதிரிப்படிவத்தில் குறிப்பிட்டபடி எழுதப்பட்டு ஆயுள்வேத அதிபர், கொட்டா வீதி, கொழும்பு 8 என விலாசமிடப்பட்டு 30.04.1973 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. வேதனவிகிதம் : இப்பதவிக்குரிய திரட்டிய வேதன விகிதம் வருடம் ரூபா 5,736—6×144, 8×180—ரூபா 8,040/- தாகும். வருடம் ரூபா 6,780/- தும், ரூபா 7,500/-. ம் பெறுமுன்னர் திறன்காண் பரீட்சையில் சித்தியடையவேண்டும்.

3. நியமன நியதி சேவை நிபந்தனைகள் :

(i) பதவி தற்காலிகமானது, நியமனம் சகாயநிதி அடிப்படையில் (P. S. P. F. Fund) அமையும்

(ii) தெரிவு செய்யப்படுபவர் சொந்த தனிப்பட்ட மருத்துவத் தொழில் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்.

4. கல்வியும் மற்றும் தராதரங்களும்:—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அவர்/அவ பின்வரும் தகைமையுடையவரென்பதை திருப்திப்படுத்த சான்றுகள் காட்டவேண்டும்.

(i) சிறந்த நல் ஒழுக்கமும் உடல்நலமுமுடையவராயிருத்தல் வேண்டும்.

(ii) 30.04.1973 ல் 23 வயதுக்குக் குறையாதவராயும், 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (கூடிய வயதெல்லை அரசாங்கத்தில் கடமை புரிவோருக்கு கவனிக்கப்படமாட்டாது)

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றில் "டிப்பிளோமா" பட்டம் பெற்றிருக்கவேண்டும். (முதலாம் அல்லது இரண்டாம் தர அல்லது "கௌரவ டிப்ளோமா" தரமுள்ளவர்கள் விரும்பற்பாலது)

5. எல்லா விண்ணப்பதாரரும் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமய தீட்டைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத்தொகுப்பு பொருட்டுவழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டா)

(ஆ) பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்

(இ) தற்போது பெறப்பெற்ற இரு குணச்சான்றிதழ்கள் (அரசாங்க சேவையிலுள்ளவர்கட்கு இவை தேவை இல்லை).

குறிப்பு.—இத்துடன் அனுப்பப்படுபவை எதுவும் திருப்பி அனுப்பப்படமாட்டாது. வர்த்தமானியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பகுதி I பிரிவு (II) ஆள்ள இலங்கைக் குடியரசின் அரசாங்க சேவைப்பதவிகட்குரிய விதிகள் இப்பதவிக்கும் உரியதாகும்.

டபிள்யு பீ. வெவேகம,
ஆயுள்வேத அதிபர்.

ஆயுள்வேத இலாகா,
கொழும்பு 8.
26.03.1973.

**மாதிரிப்படிவம்**

ஆயுள்வேத இலாகா

1. முழுப் பெயர் :————.
(அ) உண்மைப்பெயர் :————.
(ஆ) மற்றும் பெயர்கள் :————.

2. விலாசம் :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சாட்சிப்பத்திரப் பிரதி இணைக்கவும்)
30.04.1973 ல் சரியான வயது :————வருடம் ———— மாதம் ———— நாட்கள்

4. (அ) இலங்கைப் பிரஜையா அல்லவா :————.
(ஆ) இலங்கையரா அல்லது பதிவு மூலம் இலங்கையரா

5. பெற்ற உயர்ந்த கல்வித் தராதரங்கள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

6. விண்ணப்பதாரர் "டிப்பிளோமா" பட்டம் பெற்றவராயின் தொழிற்கல்வித் தராதரம் குறிப்பிடுக (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
(i) டிப்பிளோமாவின் பெயர் :————.
பிரிவு ஆயுள்வேதம்/யுனானி/சித்த
(ii) டிப்பிளோமா பெற்ற வருடம் :————.
(iii) தரம்
(iv) கல்லூரி

7. விண்ணப்பதாரருக்கு உயர்பட்டதகைமையிருப்பின் குறிப்பிடுக.
(i) டிப்பிளோமாவின் பெயர் :————
(ii) வருடம் :————.
(iii) கல்லூரி :————.

8. பதிவு செய்யப்பட்ட வைத்தியராயின் பதிவு செய்த வருடமும் இலக்கமும் :————.

9. தனிப்பட்டவைத்தியத்திலுள்ள தேர்ச்சி :————.
(சான்றிதழ் பிரதி இணைக்கவும்)

10. அரசாங்க ஊதியராயின் வகிக்கும் பதவி, தெரிவு செய்யப்பட்ட திகதி பதவியிலிருந்து விலகிய திகதியும் காரணமும் :————.

11. வேறு ஏதும் விளக்கங்கள் (குறிப்புகள்) ————.
மேற்காட்டியுள்ள விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட சகல விபரங்களும் சரியானவையும் உண்மையுமானது. இதிற் குறிப்பிட்டவை ஏதும் பிழையாக அல்லது உண்மையற்றதாக தெரிவு செய்யப்படுமுன் காணப்படின் நான் தகுதியற்றவனாகவும் தெரிவின்பின் கண்டு பிடிக்கப்படின் நஷ்டஈடு ஏதுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படத் தகுதியுடையவரென்பதையும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரர் ஒப்பம்.

திகதி :————.

4-104—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மின்சாரப் பொறியியல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தகைமைகள் :—**

(1) கணிதத்துடன் பௌதிகம் அல்லது யந்திரவியல் அல்லது ரசாயனவியலைப் பாடங்களாக எடுத்து சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி,

(2) கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் மின்சாரப் பொறியியல்துறையில் கனிஷ்ட தொழில்நுட்ப பொறியியலாளர் சான்றிதழ்,

(3) மேற்பார்வையாளராக ஐந்தாண்டு அனுபவம்,

(4) தம்கீழ்ப் பணியாற்றும் உத்தியோகத்தர்களைக் கட்டுப்படுத்தும் திறன்,

(5) மின்சாரப் பொறியியற் பயிற்சிபற்றிய சிறந்த அறிவு,

(6) ஐ. ஈ. ஈ. ஒழுங்குமுறைப்படி கட்டிடங்களில் மின் இணைப்பு அமைப்பதில் சிறந்த அனுபவர்.

**வயது :—25–40.**

**வேதன விகிதம் :** ரூபா 680 — 860 (6 × 30)

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தின் உருவில் அமைந்திருத்தல் வேண்டும். அவை 26.04.1973 க்கு முன் கிடைக்கத்தக்கனவாய் " மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 " என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுறத் தலைப்பில் " மின்சாரப் பொறியியல் உதவியாளர் " என்று குறிப்பிடவேண்டும்.

ஒஸ்வால்ட் திலகரத்ன,
பதில் மா அதிகாரி.

கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 28 ந் வ.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

................................ பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ———.
   (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ———.
   (திரு./திருமதி/செல்வி)
2. சொந்த முகவரி : ———.
3. பிறந்த திகதி : ———.
   06.04.1973 அன்று வயது : ———.
   வருடங்கள் :——— மாதங்கள் : ——— நாட்கள் :———
   (பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்)
4. தேசிய இனம் : ———.
5. கல்வியும் பயிற்சியும் : ———.

| கற்ற பாடசாலைகள் அல்லது கல்லூரிகள் | திகதி முதல் வரை | தேர்ச்சி பெற்ற பரீட்சை | மேற்கொண்ட பொறுப்புகள் பதவிகள் |
|---|---|---|---|
| | | | |

6. தேர்ச்சிபெற்ற மிக உயர்ந்த பரீட்சை : ———.
   சிங்களம் : ———. தமிழ் : ——— ஆங்கிலம் : ———
   (தேர்ச்சிச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
7. தொழில்நுட்ப/உத்தியோகத் தகைமைகள் : ———.
8. அனுபவம் : ———.
   முந்தைய அனுபவம், உத்தியோகம்பற்றிய விவரங்கள் ஆண்டுக் கிரமப்படி : ———.
9. சொந்த வாழ்க்கையில் உங்களை நன்கறிந்தவர்களான மூவரின் பெயரும் விலாசமும் பதவியும். இவர்கள் உறவினர்களாக இருத்தலாகாது :
   1.
   2.
   3.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியுள்ளோரின் பெயரும் விலாசமும் :–
   1.
   2.
   3.
11. பிற விவரங்கள் : ———.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்களுள் எவையேனும் பொய்யானவை என்றோ பிழையானவை என்றோ காணப்பட்டால் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியை இழந்தவனுவேன் என்பதையும் பதவி ஏற்றபின் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் யாதொரு நட்ட ஈடுமின்றி வேலையினின்று நீக்கப்படுவேன் என்பதையும் அறிந்துள்ளேன்.

................,

திகதி : ———. விண்ணப்பதாரர் கையொப்பம்.

4–135—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

1/30/144(ஜீ)

### காணி உரிமை நிருணயத் திணைக்களத்தில் சேவைக்காக பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை ஆகிய சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்கள்

வழமையான விதப்படி வாழ்க்கைப்படியும், பிரயாணப்படியும் பெறும் பேச்சுப் பெயர்ப்பாளர்களாக, சுற்றுப் பிரயாணக் கடமைக்கு, தகுதியான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் எதிர்நோக்குடன், காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை ஆகிய சேவைகளில் ஏற்கெனவே உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக (அ) சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அல்லது (ஆ) சிங்களம் ஆங்கிலம் தமிழ் ஆகிய மூன்று பாடங்களிலும் தேர்ச்சிபெற்ற பொது எழுதுநர் சேவை (வகுப்பு II பிரிவு அ வும் பிரிவு ஆ வும்) தட்டெழுத்தாளர் சேவை சுருக்கெழுத்தாளர் சேவை ஆகிய சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பதாரிகள் மேற்கூறிய (அ) அல்லது (ஆ) பாஷைகளை பாடங்களாகக் கொண்ட சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது பொதுக்கல்வித் தராதரப் பத்திரத்தை (சாதாரணம்) யுடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வறிவித்தலின் பொருட்டு திறைசேரியினால் நடாத்தப்பட்ட தேர்ச்சிப் பரீட்சையில் சிங்களம்/தமிழில் உயர்தாத்தின் சித்தியை சி.பா.த. அல்லது பொ.க.த. (சாதாரணம்) பரீட்சையிற் சாதாரணச் சித்திக்குச் சமனுகக் கருதப்படும்.

3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அரசகரும மொழியிலும் ஆங்கில மொழியிலும் தமது கடமைகளை ஆற்ற உடன்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் உதவி உரிமை நிர்ணய உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்யவும், பேச்சுப் பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு வேலைகளில் ஈடுபடவும் தயாராகவிருத்தல் வேண்டும்.

4. கொழும்பு 1, யோக் வீதியிலுள்ள நில உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் உரிமை நிர்ணய உத்தியோகத்தருக்கு 1973 மே 7 ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக திணைக்களத் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்கள் கீழ் கொடுக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது திணைக்களத் தலைவர்கள் ஒரு உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவ்வுத்தியோகத்தரை எம் முந்திய தேதியிலிருந்து விடுவிக்கலாம் எனவும் பதில் நியமனம் தேவையா எனவும் கூறல் வேண்டும்.

5. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தேவைப்படுமிடத்து கொழும்பில் வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படலாம். அப்படியான வாய்மொழிப் பரீட்சைக்கு கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறும் வேண்டப்படலாம். இந்நோக்கத்திற்காக பிரயாணச் செலவுகளுக்கும் கடமை விடுதலைக்கும் அனுமதி கொடுக்கப்படும்.

6. மேற்கூறிய நிபந்தனைகளுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட நியமனக் கடிதங்களில் கூறப்பட்ட நியதிகளாலும் நிபந்தனைகளாலும் கட்டுண்டவராவர்.

பி. மகாதேவ,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரும்,
அரசாங்க நிருவாக பதில் பணிப்பாளர் அதிபதியும்.

கொழும்பு 7,
1973 ஆம் ஆண்டு மார்ச்சு 10 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**நில உரிமை நிர்ணயத் திணைக்களத்தில் சேவைக்காய விண்ணப்பம்**

1. முழுப் பெயர், சொந்தப் பெயர் முதல் :————.
(அச்சு எழுத்துக்களில்)

2. பிறந்த தேதி :————.

3. (அ) சேவை :————.
(ஆ) வகுப்பு, தரம் அல்லது பிரிவும் அதனிற் சேர்ந்த திகதியும் :————.

4. நீர் பொது எழுதுநர் சேவைக்கு/தட்டெழுத்தாளர் சேவைக்கு/ சுருக்கெழுத்தாளர் சேவைக்கு எம்மொழி மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர் :————.

5. தற்போதைய திணைக்களமும் ஸ்தானமும் :————.

6. அலுவலக முகவரி :————.

7. சித்தியடைந்த உயர் பரீட்சை :————.
(அ) சிங்களத்தில் :————.
(ஆ) தமிழில் :————.
(இ) ஆங்கிலத்தில் :————.
(திறமைச் சித்திகளைக் குறிப்பிடுக)

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பதாரி பொது எழுதுநர் சேவை வகுப்பு II இல் அ/ஆ பிரிவு/ தட்டெழுத்தாளர் சேவை/சுருக்கெழுத்தாளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர் என நான் உறுதிப்படுத்துகின்றேன். 1973 ஆம் ஆண்டு மாதம் ஆந் தேதியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது. பதில் நியமனம் தேவை/ தேவையில்லை.

————,
திணைக்களத் தலைவரின் ஒப்பம்.

திகதி :————.

4–100—06.04.73 ந தி திய வர்த்தமானி இல. 54.

---

**கடற்றொழில் திணைக்களம்**

கடலக பொறியியல் உதவியாளர் பதவிகள்

கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் திணைக்களத்தில் கடலக பொறியியல் உதவியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு 1973.04.30 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எம்மை வந்தடையுமாறு அனுப்பப்படவேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்கான திரட்டிய சம்பளத் திட்டம் வருமாறு :—ரூபா 5,016/- (ஈராண்டு, பயிற்சியின் போது) பயிற்சியைச் சித்தியுடன் முடிவுறுத்தியபின் ஆண்டுக்கு ரூபா 5,880–114 உம் 180—ரூபா 8,040 வரை வழங்கப்படும்.

3. **நியமன நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்றவையுமாகும். நியமதாரி தமது சம்பளத்திலிருந்து அரசினர் சேவைச் சகாய நிதிக்குக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். எனினும் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து இப்புதிய பதவியினதும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெறும் வாய்ப்புடையவராவர். நியமனம் 3 வருடங்களுக்கு தகுதிகாண் முறையில் இருக்கும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் பின்வருந் தகைமைகளுடையவரென்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(1) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(2) 1973.05.01 இல் 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளோரை வயதெல்லைகள் பிணியா).

(3) (அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் பொறிமுறை பொறியியல், நாள்த் தகுதித்தேர்வுப் பத்திரமுடையவராக, அல்லது

(ஆ) (1) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்டதொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சான்றிதழையும் அல்லது கல்லோயா அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பொறிமுறை பொறியியல் தகுதித் தேர்வுப் பத்திரத்தையும் அல்லது அதையொத்த தகைமைகளையும்,

(2) அத்தகைய சான்றிதழையோ தகுதித் தேர்வுப் பத்திரத்தையோ பெற்றபின், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியல் தொழில் பொறிக்களத்தில் 5 ஆண்டுகள் செய்முறை அனுபவத்தையும் பெற்றவராய், அல்லது

(இ) பொறிமுறை பொறியியல் மாலை பொறியியல் தொழிற் சான்றிதழுடன் (எம். ஈ. III), அங்கீகரிக்கப்பட்டதொரு பொறியியல் தொழில் பொறிக்களத்தில் 10 ஆண்டு செயல்முறை அனுபவம் பெற்றவராய் அல்லது இலண்டன் சிட்டி அன் கில்ட்ஸ் நிறுவனத்தின் இயைபுள்ள தொழில்நுட்பவியல் சான்றிதழ்கள் போன்ற அத்தகைய தகைமைகள் பெற்று, அங்கீகரிக்கப்பட்டதொரு, பொறியியல் தொழில் பொறிக்களத்தில் 10 ஆண்டு செய்முறை அனுபவம் பெற்றவராய், அல்லது

(ஈ) எஸ். எஸ். சீ. அல்லது அதையொத்த அல்லது அதிலும் மேற்பட்ட சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியல் தொழில் பொறிக்களத்தில் போர்மன் போன்ற மேற்பார்வைப் பதவியில் 8 ஆண்டுகளுடன் தொழிற் பயிற்சியையும் உள்ளடக்குவதாக 15 ஆண்டு அனுபவமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர் தத்தம் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைக்கவேண்டும் :—

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு. ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(2) கல்வி, ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

(3) அண்மையில் பெற்ற 3 குணச் சான்றிதழ்கள்.

இப்பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் கடற்றொழில் இயக்குநர் என்று பதவி குறித்தனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்கச் சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

**ஏ. ஐ. முகைதீன்,**
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
த. பெ. எண் 531,
கொழும்பு 3,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 13 ந் உ.

**விண்ணப்பப் படிவம்**

கடலக பொறியியல் உதவியாளர் பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

**(குறிப்பு.**—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையின் இடப்பக்கத்து மேல்மூலையில் " கடலக பொறியியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் " என எழுதிப் பதிவு அஞ்சலில், கடற்றொழில் இயக்குநர், த. பெ. எண் 531, கொழும்பு 3, என்ற முகவரிக்கு அதை அனுப்ப வேண்டும்).

1. முழுப்பெயர் : ————.
2. முகவரி : ————.
3. பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)
4. நாட்டினம் : ————.
5. விவாகமானவரா தனியாளரா ? : ————.
6. (அ) கல்வித் தகைமைகள் : ————.
(ஆ) தொழில்நுட்பத் தகைமைகள் : ————.
7. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/ அல்லது பயிற்சியும் : ————.

8. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ———.

9. வேறு தகைமைகள் : ———.

இவ்விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்கள் எவையாவது பொய்யானவையோ, சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும், நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள்ளேன்.

———,
ஒப்பம்.

திகதி : ———.

4-136—06.04.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### சைகைப் பணியாளர் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் சைகைப் பணியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பின்வரும் அமைவுமுறை பெறுவனவாகி 1973.04.28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கப்பற்றுறை ஆணையாளர் (கடற்செலவுப் பகுதி) கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கொழும்பு 1 இல் கிடைக்க வேண்டும்.

2. **வேதன விகிதம்.**—இப்பதவிக்கான திரட்டிய வேதன விகிதம், வருடமொன்றுக்கு ரூபா 3,000—90×17—4,530 ஆகும். (ரூபா 3,810 க்கு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு).

3. **நியமன நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர் அரச சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை செலுத்த வேண்டும். முதற்கண் நியமனம் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அல்லது பதில் நியமன அடிப்படையில் அமையும்.

குறிப்பு.—1972.01.01 க்கு முன்னர் அரச சேவையில் ஓய்வூதியமுடைய பதவியொன்றில் இருப்பவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரது நியமனம் தொடர்ந்தும் ஓய்வூதியமுடையதாகவே இருக்கும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையவரென்பதற்குத் தக்க சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) க.பொ.த.ப. பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒழுக்க நலமும், உடல் நலமுமுடையவராயிருத்தல் வேண்டும்.

(இ) 28.04.73 இல் அன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயுமிருத்தல் வேண்டும்.

(ஈ) (1) குறித்தம்பத்தால் நிமிடமொன்றுக்கு 8 சொற்கள் வரை ;

(2) பளிச்சொளி விளக்கால் நிமிடமொன்றுக்கு 6 சொற்கள்வரை ;

(3) சருவதேசக் குறியீட்டால் ;

சைகைகளை அனுப்பவும் பெறவும் வல்லமையுடையவராயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் தம் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் படிகளை (மூலங்களையல்ல) அணைத்தல் வேண்டும் :

(அ) பெற்ற அதியுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(ஆ) சைகை செய்தலில் தேர்ச்சிக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரின் ஒழுக்க நலம்பற்றி அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

குறிப்பு.—இச்சான்றிதழ்களின் படிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கப்பற்றுறை ஆணையாளர் (கடற்செலவுப் பகுதி) கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றித் திணைக்களம் சார்ந்த எந்த அலுவலருக்கும் சொந்த முகவரியிட்டு அனுப்பலாகாது.

7. அரசாங்க சேவை சார்ந்த பொது நிபந்தனை இக்கசற்றின் பகுதி I பிரிவு IIஅ இல் பார்க்க.

சி. லூடிகன்ஸ்,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகம்,
கொழும்பு 1,
1973.03.27.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

**சைகைப் பணியாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் :———.
(தெளிவான எழுத்துக்களில்)

2. நிரந்தர முகவரி :———.

3. பிறந்த திகதி :———.
1973 :———: ஆம் திகதியன்று வயது :———.

4. சாதியம் :———.

5. பிறந்த இடம் :———.

6. விவாகமானவரா விவாகமாகாதவரா ?:———.

7. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் படிகள் அணைத்தல் வேண்டும்) :———.

8. கல்வி பயின்ற பாடசாலைகளும், விலகிய திகதியும் :———.

9. பாடசாலையிலிருந்து விலகிய பின் செய்த தொழில்களும், அத்தொழில்களின் முழு விபரங்களும் :———.

10. தற்போதைய தொழிலும் வேதனமும் :———.

11. (1) குறித்தம்பத்தால் நிமிடமொன்றுக்கு 8 சொற்கள் வரையும்,

(2) பளிச்சொளி விளக்கால் நிமிடமொன்றுக்கு 6 சொற்கள்வரையும்,

(3) சருவதேசக் குறியீட்டால் ;

சைகைகளை அனுப்பவும் பெறவும் உமக்கு வல்லமை உண்டா ? அப்படியாயின் சைகை செய்வதில் அனுபவம் பெற்ற நிறுவனத்தின் பெயர் :———.

12. ஏதாவது விசேட தகைமைகள் பற்றிய விபரங்கள் :———

13. நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளவர்களின் பெயர்களும் பதவி நிலைகளும் :———.
(இவற்றின் படிகளை அணைத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் செம்மையும் உண்மையும் வாய்ந்தவையென உறுதி கூறுகிறேன். இங்குள்ள விபரங்களுள் ஏதாயினும் தவறானதென்றோ உண்மையற்றதென்றோ தேர்வுக்கு முன்னர் கண்டுபிடித்தால் தகைமை இழப்புக்கும், நியமனத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் இழப்பீடின்றி பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :———.

4-101/1—06.04.73 ந் தி : திய வர்த்தமானி இல. 54

---

எனது எண் : என்எஸ் 5/4/57

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### கலப்பற்றடிப்பவர் (மரம்) வகுப்பு 2, பதவிகள்

ப்பற்றுறை ஆணைக்குழுவில் கலப்பற்றடிப்பவர் (மரம்) வகுப்பு 2 பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பின்வரும் படிவ அமைவு பெறுவனவாகி 1973.04.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கப்பற்றுறை ஆணையாளர், த.பெ. எண் 528,கொழும்பு என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

2. **வேதனம் :**

பதவிக்குரிய திரட்டு வேதனம் ஆண்டொன்றுக்கு 2,640—15×60—3,540 ரூபாவாகும்.

3. **சேர்வு நியதிகள் :**

பதவிகள் நிரந்தரமானவை. நியமனம் ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் அமையும். தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்குத் தனது திரட்டிய வேதனத்தில் 6% உதவுதொகையாக வழங்கும் வண்ணம் வேண்டப்படுவர். அரசாங்கம் 9% கொடுத்துதவும்.

4. வேண்டப்படும் தகைமைகள் :

(அ) 1973.04.30 இல் 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 35 வயதுக்கு குறைந்தவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) எழுத, வாசிக்கக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 ஆம் வகுப்புக் கலப்பற்றடிப்பவராக 5 வருட சேவையுடையவராயிருத்தல் வேண்டும். (சான்றிதழ் வழங்க வேண்டும்.)

(ஈ) 3 ஆம் வகுப்புக் கலப்பற்றடிப்பவராக ஆகக்குறைந்தது 4 வருட அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

(உ) கலப்பற்றடித்தல் தொடர்பான எல்லா அம்சங்கள் பற்றியும் பூரண அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு : சமயதீட்சைச் சான்றிதழோ, உதவி பெறும் பாடசாலை ஒழுங்கு விதிக் கோவைத் தேவை நோக்கில் வழங்கப்பட்ட சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய ஆகக்கூடிய சான்றிதழ்.

(இ) செய்முறை அனுபவம்பற்றிய சான்றிதழ்.

(ஈ) விண்ணப்பகாரரின் ஒழுக்கநலம், ஆற்றல் பதவிவகிக்கத் தகுதிலை என்பனகாட்டும் அண்மையிற்பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

குறிப்பு.—மேற்கூறப்பட்ட சான்றிதழ்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பகாரர் பின்வரும் விபரங்களை வழங்கக் கூடியவராயிருத்தல் வேண்டும் :—

பிறந்த இடம் :

அ. விண்ணப்பகாரர்
ஆ. விண்ணப்பகாரரின் தந்தை
இ. விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன்
ஈ. விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன்

7. விண்ணப்பங்கள் கப்பற்றுறை ஆணையாளர் (கடற்செலவு) கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி இத்திணைக்களம் சார்ந்த அலுவலர் எவரதும் தனி முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

8. அரசாங்க சேவைசார்ந்த பொது நிபந்தனைகளை இவ்வர்த்தமானியின் பகுதி I. பிரிவு II இல் பார்க்க.

கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
அ.பெ. எண். 528,
கொழும்பு 1,
1973.

மாதிரி விண்ணப்பப் படிவம்
கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு
கலப்பற்றடிப்பவர் (மரம்) வகுப்பு 2, பதவிகள்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. நிரந்தர முகவரி :————.

3. பிறந்த திகதி :————.
வயது : வருடங்கள் :————, மாதங்கள் :————
நாட்கள் :————.
(பிறப்புச் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்)

4. சாதியம் :————.

5. பிறந்த இடம் :————.

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.

(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்திருப்பின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) யும் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திராவிடின் (அ) வுடன் (ஆ), (இ) உம் அல்லது (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

6. விவாகமானவரா விவாகமாகாதவரா ?:————.

7. தற்போதைய தொழிலும் சம்பளவிகிதமும் :————.

8. கல்வித் தகைமைகள் :————.
(சான்றிதழின் படிகளை அணைத்தல் வேண்டும்)

9. அனுபவம், தொழில் முறைத் தகைமை சார்ந்த விபரங்கள் :
————.

10. விசேட கோரிக்கைகள் பற்றிய விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் யாவும் செம்மையும் உண்மையும் வாய்ந்தவையென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்குள்ள விபரங்களுள் ஏதாயினும் தவறானதென்றோ உண்மையற்றதென்றோ, தேர்வுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்துத் தகைமையிழப்புக்கும், நியமனத்துக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் இழப்பீடின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-101/2—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல 54

---

ஆயுள்வேதத் திணைக்களம்

விஞ்ஞான விரிவுரையாளர் பதவி—ஆயுள்வேதக் கல்லூரி

ஆயுள்வேத திணைக்களத்தில் ஆயுள்வேதக் கல்லூரி விஞ்ஞான விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு வந்துசேர வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 27.4.1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 4.5.1973.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புதற்குக் கடைசி நாட்கள் வரை தாமதிப்பவர்கள் அதனால் ஏற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள வேட்பாளர்கள், விரும்பினால் தாம் வதியும் நாட்டிலுள்ள அல்லது அதற்கண்மை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்தில், சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள், சேவைக்கு உடற்தகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, அங்கீகாரம் பெற்ற மருத்துவத் தொழில் புரிவோரால் சோதிக்கப்படுதற்கு, அவர்கள் பிரசன்னமாகுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருதற்கு ஏற்படும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானது. அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவு தொகைகள் செலுத்தப்படும்.

3. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் ஆண்டொன்றுக்கு ரூ. 6,720—360 × 12—11,040. ரூ. 9,600 க்கு முன்னர் திறமைகாண் தடை ஒன்று இருக்கும். இதற்கு விஞ்ஞானம் பற்றி, அங்கீகரிக்கப்படக்கூடிய நூல் ஒன்று எழுதப்பட வேண்டியிருக்கும்.

4. கல்வித் தகைமைகளும், பிறதகைமைகளும்.—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமும் நல்ல உடற்சுகமும் உடையவர் ;

(ஆ) 6.4.1973 ஆம் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்குமேல் வயதெல்லை ஏற்புடைத்தன்று) ;

(இ) கீழ்க்காணும் பாடங்களில் ஏதாவது இரண்டில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றினது விஞ்ஞானப் பட்டம் பெற்றவராக இருத்தல் :—இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல்—(இப்பாடங்கள் எதிலும் பெறப்பட்டுள்ள சிறப்புப் பட்டத்திற்கு அதிக அங்கீகாரமுண்டு) ;

(ஈ) க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையிலும் பார்க்க உயர்ந்த பரீட்சைகளுக்குப் படிப்பித்தலில் குறைந்தது 3 வருட அனுபவம் உடையவராயிருத்தல் ;

(உ) ஆங்கிலத்திலும் தமிழிலும் படிப்பிக்கக் கூடியவராயிருத்தல்.

5. பின்வரும் பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கேட்கப்படும்போது சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் வேண்டப்படுவர் :—

பின்வரும் பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கேகப்படும்போது சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு.கு :—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைச் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப்படிப்பு அல்லது ஆகக்கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இவை இரண்டும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்துள்ள மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

*குறிப்பு.—(i) பத்திரங்களோ அல்லது பத்திரங்களது படிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படக்கூடாது ;

(ii) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்பட வேண்டுமே தவிர மற்றெந்த உத்தியோகத்தருக்கும் அல்ல.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகிறது.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சின் அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
26.3.1973.

சுகாதார அமைச்சு

**விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பிக்கப்பட்ட பதவி

பதவி.
திணைக்களம்

2. முழுப்பெயரும் :————.
(பெரிய எழுத்துக்களில்)

3. பிறந்த திகதி :————.
ஆண்டு :————. மாதம் :————. திகதி :————.

5. உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :————.
வருடங்கள்
மாதங்கள்
நாட்கள்

6. நீர் இலங்கைக் குடியானவரா ? பரம்பரை காரணமாகவா பதிவு காரணமாகவா என்பதைக் குறிப்பிடவும் ? :————.
( (1) ம் இலக்கக் குறிப்பைப் பார்க்கவும்)

7. பிறந்த இடம் :—
(2 ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்கவும்)
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) தகப்பன் :————.
(இ) தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) தகப்பன் வழிப்பூட்டன் :————.

8. (அ) பால் :————.
(ஆ) திருமாணவர், தனியானவர், தாரமிழந்தவர் :————.

9. பின்வருவனவற்றில் சித்திபெற்ற உயர் பரீட்சைகள் :————.
(1) சிங்களம்
(2) தமிழ்
(3) ஆங்கிலம்

(1)
(2)
(3)

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள் பிறதாபனங்கள் ஆகியவை :————.

| பொதுக் கல்வி | | தொழிற் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் வரை | நிலையம் | தொடக்கம் வரை |
| (1) | | (1) | |
| (2) | | (2) | |
| (3) | | (3) | |
| (4) | | (4) | |
| (5) | | (5) | |

11. விளையாட்டுக்களில் பெற்ற சிறப்புகளும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் :————.

12. (அ) நீர் பணமுட்டு எதுவும் இல்லாதவரா ? அவ்வாறு இல்லையாயின் எவ்வளவுக்கு ? :————.

(ஆ) நீதிமன்றமொன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ்சாட்டப்பட்டவரா ? அவ்வாறாயின் திகதிகள், வழக்கு இலக்கம் ஆகியவற்றோடு முழு விபரங்களையும் தருக :————.

13. உயர்கல்வி, உயர்தொழில், தொழில்நுட்பத் தகைமைகள் : (பட்டங்கள், சிறப்புகள், உயர்தொழில் அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்திபெற்றிருப்பின் அதனையும், பாடங்கள், நிலையங்களின் பெயர்கள் ஆகிய விபரங்களோடு தருக) :————.

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் எதுவுமிருப்பின் அவற்றையும் (தொழிலில் சேர்ந்த. விலகிய திகதிகளும் பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படல் வேண்டும்) :————.

முக்கியம்.—அரசாங்கத் தொழிலை விட்டு விலகிய காரணத்தை இதன் கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்.

| பதவி | தொடக்கம் வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |

15. சிறப்புத் தகைமைகள் :————.
(அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டுமுடையவரா ? அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவைகளைப் பார்க்க.)

16. மேலும் விபரங்கள் எதுவுமிருப்பின் :————.

17. இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதி செய்கிறேன். இதன் கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுதற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்டஈடெதுவுமின்றி வேலைநீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

குறிப்புகள்.—(1) பதிவு காரணமாக இலங்கைக் குடியானவராயின் தொடர் எண்ணையும் குடியுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வையிட (ஆ) லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

அபேட்சகர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

திணைக்களத் தலைவரின் பெயரும்,
பதவிப் பெயரும்.

திகதி :————.

4–87—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

**பதுளை மாவட்டத்தில், தென்னகும்புற பிரிவிற்கு, பிறப்பு, இறப்பு உடுகின்ட பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி**

தென்னகும்புற, பிறப்பு, இறப்புப் பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாகக்குடி இருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும் கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் நிலையத்திலும், கூட்டுறவுச் சங்க அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும், இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் (சித்திரை) மாதம் 27 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மெரில் ஜெயசூரிய,
பெரும்பகுதிப் பதிவாளருக்காக.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
பதுளை.
1973 ம் ஆடு பங்குனி மீ 22 ந் வ.

4–9/1—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

**பதுளை மாவட்டத்தில், கம்பஹா பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் உடுகின்ட பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி**

கம்பஹா பிறப்பு, இறப்புப் பதிவுப்பிரிவிற்குள், நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும், நிபந்தனைகள் ஆகிய விரபங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையத்திலும், கூட்டுறவுச்சங்க அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும், இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் (சித்திரை) மாதம் 27 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மெரில் ஜெயசூரிய,
பெரும்பகுதிப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
பதுளை.
1973 ம் ஆடு பங்குனி மீ 22 ந் வ.

4–9/2—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

**பதுளை மாவட்டத்தில், வம்பறபனே பிரிவிற்கு, பிறப்பு, இறப்பும், உடுகின்ட பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி**

வம்பறபனே, பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடி இருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும், விண்ணப்ப முடிவு திகதியன்று, இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையத்திலும், கூட்டுறவுச் சங்க அலுவலகங்களிலும், பார்வைக்கு வைத்திருக்கப் பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும், இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் (சித்திரை) மாதம் 27 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மெரில் ஜெயசூரிய,
பெரும்பகுதிப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
பதுளை.
1973 ம் ஆடு பங்குனி மீ 22 ந் வ.

4–9/3—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

### பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டு அமைச்சு

### விளையாட்டு உதவிப் பணிப்பாளர் பதவி—(தொழினுட்பம்)

பாராளுமன்ற அலுவல், விளையாட்டு அமைச்சில் விளையாட்டு உதவிப் பணிப்பாளர் பதவிக்கு (தொழினுட்பம்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள தேதிகளில் அல்லது அவற்றுக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாகச் செயலாளர், பாராளுமன்ற அலுவல், விளையாட்டு அமைச்சு, 33, ரொறிங்ரன் இடம், கொழும்பு 7 என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 ஏப்ரல் 27.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1973 மே 4.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் இழக்கப்பட்டு விட்டது அல்லது தாமதிக்கப்பட்டு விட்டது என்னும் குற்றச் சாட்டு எதுவும் பரிசீலிக்கப்படமாட்டாது. இறுதி நாள் வரையில் விண்ணப்பங்களைத் தாமதிக்கும் வேட்பாளர்கள் தமது சொந்தப் பொறுப்பிலேயே அப்படிச் செய்பவர் ஆவர்.

(ii) வெளி நாட்டு வேட்பாளர்கள் தாம் விரும்பினால் விண்ணப்பங்களைச் செயலாளர், பாராளுமன்ற அலுவல், விளையாட்டு அமைச்சு, 33, ரொறிங்ரன் இடம், கொழும்பு 7 என்னும் முகவரிக்கு அனுப்பும் பொருட்டு தாம் வசிக்கும் நாட்டுக்கு அல்லது அதற்குக் கிட்டிய நாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள ஸ்ரீ லங்கா பிரதிநிதியின் அலுவலகத்துக்கு விதிக்கப் பெற்ற தேதிக்குள் அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் நியமிப்புச் செய்வதன் பொருட்டு வெளிநாடுகளில் தெரிவு செய்யப்பெற்ற ஸ்ரீ லங்கா உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் ஸ்ரீ லங்காவுக்குப் பயணம் செல்வதற்குரிய தங்கள் செலவையும் உத்தியோகத்தரே செலுத்துதல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானது, அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

3. **வேதனமும் படிகளும்.**—இப் பதவிக்குரிய திரட்டிய வேதனம் ஆண்டொன்றுக்கு 9,600/- ரூபா தொடக்கம் 360/- ரூபா கொண்ட 4 ஏற்றங்களாகவும் 480/- கொண்ட 10 ஏற்றங்களாகவும் 600/- ரூபா கொண்ட 5 ஏற்றங்களாகவும் 18,840/- ரூபா வரை உயரும்.

சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைய வீதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக ஓய்வூதியமற்ற படியும் வழங்கப்படும்.

குறிப்பு : தெரிவு செய்யப்பெற்ற வேட்பாளர் வேதன அளவில் ரூபா 14,880/- இல் வைக்கப்படு முன்பு ஒரு பொருத்தமான விளையாட்டு மருத்துவ நிலையத்தில் கிளினிக்கல் பயிர்சியுடன் கூடிய உடல் நல மருந்துவத்தில் டிப்புளோமா பட்டம் ஒன்றினை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதாவது டிப்புளோமா ஒன்றினைப் பெறல் வேண்டும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) வேட்பாளர் சிறந்த நற்குணமும் உடல் நலமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) உள்ளூர் விண்ணப்பங்களுக்கான முடிவுத் தேதியிலன்று வேட்பாளர் 30 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : ஏற்கனவே அரச சேவையில் உள்ளோருக்கு இவ் வயதுமேலெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

(இ) வேட்பாளர் சுகாதாரத் திணைக்களத்தில் தகுதி பெற்ற மருத்துவ உத்தியோகத்தராய் இருத்தல் வேண்டும். அத்துடன், மருத்துவ அக நிலைப் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்ட பின்பு குறைந்தது 2 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

5. வேட்பாளர் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பிக்குமாறு கோரப்படும் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு : உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் பொருட்டான ஒழுங்கு விதிக் கோப்பின் நோக்கத்துக்காக வழங்கப் பெற்ற சமய தீட்சைச் சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது அதியுயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குண நலன் பற்றிய இரண்டு சான்றிதழ்கள். அவற்றுள் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் அல்லது இரண்டும்.

(உ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த உயர் பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—(i) சாதனங்களாயாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளரின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பாராளுமன்ற அலுவல், விளையாட்டு அமைச்சின் செயலாளருக்கு அவரின் விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். இவ்வமைச்சின் உள்ள எவ்வுத்தியோகத்தருக்காவது நேரடியாக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமிப்புக்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் பார்க்க.

எல். டபிள்யு. மடுகல்ல,
செயலாளர்,
பாராளுமன்ற அலுவல்,
விளையாட்டு அமைச்சு,

திகதி : 1973-03-27
பாராளுமன்ற அலுவல்,
விளையாட்டு அமைச்சு,
33, ரொறிங்ரன் இடம்,
கொழும்பு 7.

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

2. முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)

3. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் மாற்றம் ஏதும் ஏற்படின் அதை உடனடியாக அறிவித்தல் வேண்டும்).

4. பிறந்த தேதி :————.
வருடம் ————. மாதம் ————. தேதி ————.

5. நீர் ஸ்ரீ லங்காப் பிரசையா ? வம்சாவழிப் பிரசையா அல்லது பதிவுப் பிரசையா என்பதைக் கூறவும் (கீழே குறிப்பைப் பார்க்க) :————.

6. உள்ளூர் விண்ணப்ப முடிவுத் தேதியன்று சரியான வயது : ————.
வருடம் ————. மாதம் ————. நாள் ————.

7. பின்வருவோரின் பிறப்பிடம் :

(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) தந்தை :————.
(இ) தந்தை வழிப் பாட்டன் :————.
(ஈ) தந்தை வழிப் பூட்டன் :————.

8. (அ) பால் :———.

(ஆ) மணமானவரா ? மணமாகாதவரா ? தாரமிழந்தவரா ? விதவையா ? :———.

9. பின்வருவனவற்றில் சித்தி அடைந்த உயர் பரீட்சை.

1. சிங்களம் 2. தமிழ் 3. ஆங்கிலம்
1. ———. ———. ———.
2. ———. ———. ———.
3. ———. ———. ———.

10. 12 வயதின் பின்பு கல்வி பயின்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிற நிறுவனங்கள் :———.

பொதுக் கல்வி | உயர்தொழிற் கல்வி

| பாடசாலை அல்லது கல்லூரி இருந்து வரையில் | நிறுவனம் இருந்து வரையில் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |

11. ஏதாவது விளையாட்டுச் சிறப்புச் சாதனைகளும் அத்துறையில் நீர் வகித்த பொறுப்புள்ள பதவிகளும் :———.

12. (அ) உமக்குப் பணமுடை ஏதும் உண்டா ? இருப்பின் பொறுப்பு நிலை எத்தகையது :———.

(ஆ) குற்றவியல் குற்றம் எதனுக்காகவும் சட்டமன்றில் நீர் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளீரா ? குற்றஞ் சாட்டப்பட்டிருப்பின் தேதிகள், வழக்கு விபரங்கள் ஆகியவற்றைத் தருவதுடன் முழு விபரத்தையும் குறிப்பிடுக :———.

13. கல்வி, உயர் தொழில், தொழினுட்பத் தகைமைகள் : (பட்டம், சிறப்புச் சாதனை, உயர் தொழில் சார் அல்லது தொழினுட்பஞ் சார் அல்லது இரண்டுஞ் சார் தகைமைகள், இவை பெற்ற தேதிகள், வகுப்புக் கிடைத்திருந்தால் கிடைத்த வகுப்பு, பயின்ற பாடங்கள், கல்வி கற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் விபரங்களைத் தருக) : ———.

14. தற்போது ஏதும் தொழில் பதவி இருந்து வரையில் ஆண்டு வேதனம்

| | | | | |
|---|---|---|---|---|
| இருப்பின் அதையும் முன்பு ஏதும் நியமிப்புக்கள் பெற்றிருப்பின் அவற்றையும் தருக. (அவற்றில் சேர்ந்த திகதியையும் அவற்றை விட்டு விலகிய திகதியையும் கடைசியாகப் பெற்ற ஆண்டு வேதனத்தையும் குறிப்பிடுக) முக்கியமானது : அரசாங்கத்தின் கீழ் பணிக்கமர்த்தப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பின் அதற்கான காரணத்தை கீழே 15 ஆம் கூட்டினில் குறிப்பிடுக | | | | ரூபா |
| | 1. | | | |
| | 2. | | | |
| | 3. | | | |
| | 4. | | | |
| | 5. | | | |
| | 6. | | | |
| | 5. | | | |
| | 7. | | | |
| | 8. | | | |

15. மேலும் ஏதாவது விபரங்கள் :———.

16. இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் செம்மையும் உண்மையும் வாய்ந்தவையென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்குள்ள விபரங்களுள் ஏதாயினும் தவறுனதென்றோ உண்மையற்றதென்றோ தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து தகைமையை இழக்க நான் ஆளாவேன் என்பதையும் நியமிப்புக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் இழப்பீடின்றி பதவி நீக்கம் செய்யப்படுதற்கு நான் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :———.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

குறிப்பு : (1) நீர் பதிவின் மூலம் ஸ்ரீ லங்கா பிரசை ஆகியிருப்பின் உமக்குப் பிரசைச் சான்றிதழ் வழங்கப்பெற்ற தேதியையும் குறிப்பு இலக்கத்தையும் தருக.

வேட்பாளர் அரசாங்க சேவையில் உள்ளவராயின், திணைக்களத் தலைவரின் அறிக்கை.

———,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :———.

4-107—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நில அளவைப்பகுதி

### உத்தரவுபெற்ற படம் வரைவோருக்கான பரீட்சை

படம் வரைவோராகத் தொழில் புரிவதற்கு நில அளவையாளர் தலைமை அதிபதியின் அனுமதி பத்திரத்திற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இரு பகுதிகளடங்கியதாகும். பகுதி ஒன்று ஆள்கூற்றுதல், பகுதி இரண்டு படம் வரைதலாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் நடைபெறும்.

2. பரீட்சையின் முதல் பகுதி 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ம் திகதியும் இரண்டாம் பகுதி 1973 ம் ஆண்டு ஜூலை 2 ம் திகதியும் ஆரம்பமாகும். பகுதி ஒன்றில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாம் பகுதி பரீட்சைக்குத் தோற்றவேண்டி கேட்டுக்கொள்ளப்படமாட்டார்கள்.

3. விண்ணப்பதாரர்கள் (அ) அவர்களால் வெளிக்களக் குறிப்பிலிருந்து ஒரு படத்தை பாகைமானி மூலமாகவும், ஆள்கூறு மூலமாகவும் வரைய முடியுமென்றும் (ஆ) அப்படி வரையப்பட்ட படத்தைத் தொகை கணிக்க முடியுமென்றும் என்னைத் திருப்திப்படுத்தும்படி வேண்டப்படுவர்.

4. பரீட்சார்த்திகள் உத்தரவு சான்றிதழ் பெறுவதற்கு இரு பகுதிகளிலும் ஒரே பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

5. பரீட்சைக்கான விண்ணபங்கள் ரூபா 12 கட்டணத்துடன் எனக்கு எழுத்துமூலம் அனுப்புதல் வேண்டும். முத்திரைமூலம் அனுப்பப்படும் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காசோலை /காசுக்கட்டளை அஞ்சற் கட்டளைகள் நில அளவையாளர் தலைமை அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் இக்கந்தோரால் விநியோகிக்கப்படமாட்டா. கீழ்க்காணும் விபரங்கள் கொடுக்கப்படல் வேண்டும் :—

(அ) முழுப்பெயர் ;
(ஆ) நிரந்தர விலாசம் ;
(இ) பிறந்த திகதி ;
(ஈ) சித்தியெய்திய மிக உயர்ந்த பரீட்சையும் மொழிமூலமும்.
(உ) பரீட்சார்த்தி தோற்ற விரும்பும் மொழி ;

6. 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ம் திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. வரைதல் தாளும், ஆள்கூற்றுத்தாளும் பரீட்சையின்போது கொடுக்கப்படும். ஆனல் வரைதல் உபகரணங்கள், ஆள்கூற்றின் தொகை கணக்கிடும் அட்டவணை மற்றும் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவர்களே கொண்டுவரல் வேண்டும்.

8. (1) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவர் பரீட்சை எழுதும் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் தனது அடையாளத்தை மேற்பார்வையாளரின் திருப்திக்கு நிரூபித்தல் வேண்டும். அந்த நிரூபணம் கீழ்க்காணும் பத்திரங்களின் ஒன்றன்மூலமாக நிர்மாணிக்க வேண்டும் :—

(அ) தபால் அதிபர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அடையாளச் சீட்டு ;
(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்ட, வைத்திருப்பவரின் நிழற்படத்தைக் கொண்ட, ஏதாவது ஒரு சான்றிதழ். உத்தரவுச் சீட்டு அல்லது பத்திரம் ;
(ஈ) மார்புவரை பிம்பம் அடங்கிய கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படம். அதன் மறுபக்கத்தில் பரீட்சார்த்தி கையொப்பம் இட்டு அக்கையொப்பமும் மறுபக்கத்திலுள்ள புகைப்படமும் பரீட்சார்த்தியினுடையது என்று மதிப்புள்ள ஒருவர் (அதாவது பிரவேசச் சீட்டு உறுதிப்படுத்த தகைமை உடையவர்) அதனை உறுதிப்படுத்த வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவி முகவரியுடன் உறுதிப்படுத்தும் திகதியும் குறிப்பிடப்படல் வேண்டும். இப்படியாக உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்தை மேற்பார்வையாளர் ஏற்று தம்முடன் வைத்துக்கொள்வார்.

(2) பந்தி (1) ல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்காத எந்தப் பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்படவோ அல்லது பரீட்சிக்க உரித்துடையவராகவோ மாட்டார்.

ஆர். ஏ. குணவர்த்தன,
பதில் நில அளவையாளர் தலைமை அதிபதி.

நில அளவையாளர் தலைமை அதிபதியின் கந்தோர்,
" பரீட்சக் கிளை "
கிருல வீதி,
கொழும்பு-5,
1973 ம் ஆு மார்ச்சு மீ 22 ந் உ.

4-10—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது

# "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (கெசற்)"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறுல் " கையொப்பமிடப் பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம் கொழும்பு அவர்கட்கு சகல அறிவித் தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்குவரும் :—

| ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | 2.3.73 | வெள்ளி | .. | 21. 2.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 9.3.73 | வெள்ளி | .. | 28. 2.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 16.3.73 | வெள்ளி | .. | 7. 3.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 23.3.73 | வெள்ளி | .. | 14. 3.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 30.3.73 | வெள்ளி | .. | 21. 3.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| **ஏப்பிறல்** | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28. 3.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4. 4.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11. 4.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18. 4.73 | புதன் | .. | ந. ப. | 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 29 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.